بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

நாம் எதையெல்லாம் பார்த்தோமோ, கேட்டோமோ அதனை நமது வாழ்வின் அங்கமாக்க முயலும் போது தான் உண்மையான பயன் கிடைக்கும். பயன் எப்போது ஏற்படும் எனில் நாம் நமது நிலைமைகளை அந்த போதனைகளுக்கேற்ப அமைக்க வேண்டும். எதனை கேட்டோமோ அதனை கடைபிடிக்க வேண்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 28.08.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

தற்போது உலகின் பல நாடுகளிலிருந்து கடிதங்களும் ஃபேக்ஸ்களும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பிடிட்டனின் ஆண்டு மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்திகளும் இருக்கின்றன. நாங்கள் நேரடியாக M.T.A மூலம் மாநாட்டைப் பார்த்தோம் என்றும் பயனடைந்தோம் என்றும் வெளிப்படுத்தியிருந்தனர். நாம் எதையெல்லாம் பார்த்தோமோ, கேட்டோமோ அதனை நமது வாழ்வின் அங்கமாக்க முயலும் போது தான் உண்மையான பயன் கிடைக்கும்.

எவ்வாறிருப்பினும் பயன் எப்போது ஏற்படும் எனில் நாம் நமது நிலைமைகளை அந்த போதனைகளுக்கேற்ப அமைக்க வேண்டும். எதனை கேட்டோமோ அதனை கடைபிடிக்க வேண்டும். அதுவன்றி இந்த விருந்தினர் முன் நாம் எதனை எடுத்து வைத்தோமோ, கேட்டோமோ அதனை நமது விருந்தினர்கள் பொதுவாக பாராட்டுகின்றார்கள் தான். அவையெல்லாம் வெளிப்பகட்டு ஆகிவிடும். நமது அகத்தின் வெளிப்பாடாக இருக்காது.

ஒரு முஃமினது உள்ளும் புறமும் ஒன்றாக இருக்க வேண்டும். இக்காலத்தின் உலகில் நம்மீது அதிகமானவரின் கண் இருக்கின்றது. இப்போது உலகம் M.T.A மூலமாக நம்முடம் பங்காற்றுகிறது. அஹ்மதிய்ய உலகமும் மற்ற சிலரும் கேட்கின்றனர். குறிப்பாக பிரிட்டனின் மாநாடு மிகவும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. நாம் இலட்சக்கணக்கான பவுண்டுகளை ஆ.கூ.ஹ மூலம் தூதுச் செய்தியை சென்று சேர்க்க செலவு செய்கின்றோம். காரணம், மிகப்பெரிய நோக்கம் ஜமாஅத்தின் ஒவ்வொரு தனிநபரும் தமது வாழ்வின் நோக்கத்தை அடைய வேண்டும். அவர் வரை ஒரே நேரத்தில் செய்தி போய் சேர வேண்டும் என்பது தான்.

ஆகவே, நமது மகிழ்ச்சி, வாழ்த்துச் செய்தி, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது ஆகியவையெல்லாம் வெறும் வாழ்த்தாகவே நின்று விடகூடாது. மாறாக, இங்கு கலந்த கொண்டவர்களும், உலகில் ஆ.கூ.ஹ மூலமாக கேட்டவர்களும், எதனை கேட்டனரோ, பார்த்தனரோ அதனை தமது வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். தமது வாழ்வின் அங்கமாக்குங்கள். இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவன் இந்த உலகாதாய காலத்தில் நம்மை சீர்திருத்தத்திற்காக ஓர் உலகியல் கண்டுபிடிப்பை நமக்காக ஓர் ஊடகமாக்கினான். டெலிவிஷன், இன்டெர்நெட், பத்திரிகைகள் மற்றும் பிற வெளியீட்டு சாதனங்கள் நமக்காக பணி செய்யுமிடத்து அது ஓர் நம்பிக்கையாளரின் ஈமான் அதிகரிக்கவும் காரணமாகிறது. இன்றிலிருந்து 1400 வருடங்கள் முன்பு அல்லாஹ் தஆலா ஒரு நற்செய்தி தந்திருந்தான். இக்காலத்தில் இதுபோன்ற கண்டுபிடிப்புகள் வரும். அவை மார்க்கத்தை பரப்புவதற்கு உதவியாக இருக்கும். ஒவ்வொரு நாளும் நாம் இந்த முன்னறிவிப்பை மிகச்சிறப்பான முறையில் நிறைவேற காண்கின்றோம். நான் மேலும் சில விஷயங்களை கூறுவேன். பத்திரிகைகள் பற்றியும் அறிக்கையை தருவேன். அல்லாஹ் எவ்வாறு நமது தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கிறான்.

அதற்காக நாம் இறைவனுக்கு முன் குனிந்தவாறு நன்றியை வெளிப்படுத்தும் உணர்வில் செல்ல வேண்டும். இந்த நன்றியுடைமை அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப நம்மை மேலும் பல வெகுமதிகளையும், வளர்ச்சியையும் நம்மீது பொழியும். அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் நன்றி செலுத்தினால் இன்னும் அதிகமாக தருவேன். இந்த நன்றியுடைமை என்ற கருத்து நம்மை அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வைக்கிறவிடத்து அடியார்களுக்கு நன்றி செலுத்துமாறும் நமக்கு கவனமூட்டுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் அடியார்களுக்கு நன்றி செலுத்துவதில்லையோ அவர் இறைவனுக்கும் நன்றி செலுத்த மாட்டார். அல்லாஹ் தஅலா பணி செய்த பெரும்பாலான தன்னார்வ தொண்டர்களுக்கு மாநாட்டின் ஏற்பாட்டிற்கு மிகச் சிறந்த வடிவத்தை தரும் வாய்ப்பை வழங்கினான். அவற்றில் ஆண்களும், பெண்களும், வயோதிகர்களும், இளைஞர்களும், சிறுவர்களும், சிறுமிகளும் சேவை செய்தனர். மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளையும் தமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப மிகச்சிறப்பாக செய்வதற்காக முழுமையாக முயன்றனர். எல்லா தன்னார்வர்களும் பல்வேறு துறைகளைச் சார்ந்தோர், அவர்களுள் சிலர் பெரும் பணியின் இயக்குனர், டாக்டர், பொறியியல் வல்லுநர், விஞ்ஞானி, வியாபாரி, சொந்த தொழில் செய்பவர்கள், கூலி வேலை செய்பவர்கள் அனைவரும் ஒன்று கூடி பணி செய்தனர்.

சுருக்கமாக இன்னும் பல துறைகள் நான் ஏற்கனவே கூறியது போன்று அவைகளில் ஒவ்வொரு தொண்டரும், அந்த வேலை

தமக்கு தெரியுமா, தெரியாதா என்று பார்க்காமல் தமது முழு திறமையுடனும் உணர்வுடனும் பணி செய்ய முயன்று கொண்டிருந்தனர். பிறகு பணி முடிந்து ஏற்பாடுகளை சுருட்டும் பணி. எவ்வாறிருப்பினும் இப்பணியை காதிம்கள் செய்கின்றனர். இவர்கள் ஜலஸாவிற்கு முன்பும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிப்பதற்கும் வந்தனர். இப்போது அவற்றை சுருட்டுவதற்கும் பணி புரிகின்றனர். அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் அப்பணியை முடிக்காவிட்டால் இனி வருங்காலத்தில் மாநாடு நடத்த அனுமதி வழங்குவதில் சிக்கல் ஏற்படலாம்.

சுருக்கமாக, ஒவ்வொரு பணியும் மிக முக்கியமான பணியாகும். இவ்வரும் இப்பணிகளுக்காக கனடாவின் ஒரு குழுவும் வந்திருந்தது. எவ்வாறிருப்பினும், இவர்கள் அனைவரும் ஆண்களாயினும், பெண்களாயினும் அவர்கள் அனைவருக்கும் நாம் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அல்லாஹ் தஆலா இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக. தொண்டர்கள் சார்பாகவும் நான் விருந்தினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒத்துழைப்பு நல்கினர். ஒரு சிலரைத் தவிர. இதுதவிர பொதுவாக எந்த புகாரும் வரவில்லை. அங்கிங்கு என சிற்சில குறைகளைத் தவிர.

இப்போது நான் இந்த நன்றிவுடைமையின் கருத்தைத் தொடர்ந்து விருந்தாளிகளின் தாக்கங்களை கூறுகின்றேன். யுகாண்டா வில் இருந்து மிஸ்டர் விஸ்ஸன் முரஹி சாஹிப் ஆனைளைவநச டிக முநநேசயட. இவர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். கூறுகிறார்: நான் விருந்தோம்பல், பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றைப் பார்த்து மிகவும் வியந்து போனேன். எவ்வாறு மக்கள் சுய விருப்பத்துடன் பணி செய்கிறார்கள். கூறுகிறார். மனிதன் அல்ல. மலக்குகள் பணி செய்வதாக தென்படுகிற ஒரு மாநாட்டில் கலந்து கொள்ளப் போகிறேன் என்று கற்பனை செய்து பார்க்கவில்லை. கூறுகிறார். எந்த முறையில் ஜமாஅத் பணி செய்கிறரோ அதற்கேற்ப பார்த்தால் ஜமாஅத் வரக்கூடிய சில வருடங்களில் உலகில் வெற்றி பெற்றுவிடும் என்றே தோன்றுகிறது. இன்ஷா அல்லாஹ். பிறகு அவர் கூறினார். சுருக்கமாக ஆண்டு மாநாட்டைப் பற்றி நான் கூறுவதாயின் மிகப்பெரிய விஷயமாவது அஹ்மதிய்யா ஜமாஅத் மனித குலத்திற்கு அமைதி, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் மிகச்சிறந்த முன்மாதிரியாகும்.

பிரஞ்ச் கியானாவிலிருந்து ஜேர்க்பர்த்தோல் என்ற ஒரு விருந்தாளி மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் பிரஞ்ச் கோர்ட்டின் நீதியதியாவார். நாட்டின் பிஷப்பின் பிரதிநிதியாக வந்திருந்தார். கூறுகிறார்: ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரஞ்ச் கியானாவில் இருந்து புறப்படும் போது எனது காலில் வலி இருந்தது. ஆனால் மாநாட்டில் கலந்து கொண்டதும் அல்லாஹ் தஆலா அற்புதமான முறையில் குணமாக்கினான். மாநாடு முழுவதும் எனக்கு வலியின் அடையாளமே இருக்கவில்லை. அல்லாஹ்வின் ஓர் அருள். மாநாட்டின் பரக்கத்துகள் நம்மவருக்கு கிடைக்கும் போது அன்னியர் கூட அதிலிருந்து பயன்பெறுகின்றனர்.

பிறகு நைஜீரியாவின் பிரபல டெலிவிஷயன் MIT யின் சேர்மன் வந்திருந்தார். நான் அரபாத் மைதானத்தில் இருப்பதகாவும், எல்லா புறமும் அன்பும் நேசமும் தென்படுவதாகவும் உணர்ந்தேன். இத்தகைய காட்சியை நான் உலகில் எங்கும் கண்டதில்லை.

காங்கே பின்சாசாவிலிருந்து ஒருவர் வந்திருந்தார். இவர் Constitational Court உடைய ஜட்ஜ் ஆவார். கூறுகிறார். நீதிபதி என்ற முறையில் அல்லாஹ் தஆலா எனக்கு அறிவுக் கூர்மையை தந்துள்ளான். எங்கு உண்மை மறைக்கப்படுகிறது. எங்கு உண்மையை வெளிப்படுத்தப்படுகிறது என்று என்னால் அறிந்து கொள்ள முடியும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மூலம் எனக்கு எந்த இஸ்லாத்தை அறிமுகம் செய்த வைக்கப்பட்டதோ அதன் செயல் முன்மாதிரியை நான் இந்த மாநாட்டில் கண்டேன். எனது உள்ளத்தில் இருந்த சந்தேகம் தீர்ந்து விட்டது. உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்து வைப்பதே உண்மையான இஸ்லாமாகும். இஸ்லாத்தின் இத்தகைய தூதுச் செய்திதான் இன்று உலகிற்கு தேவை. இஸ்லாத்தின் எதிர்காலம் இந்த தூதுச் செய்தியுடன் தொடர்புடையது. இந்த இஸ்லாம் தான் நமக்கு தேவை. தீவிரவாதிகளின் இஸ்லாம் நமக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

சிரோலியோனின் Vice President இந்த மாநாட்டில் கலந்து கொண்டார். கூறுகிறார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு மிகவும் மகத்தானது. முழு சமுதாயங்களையும் ஒரு Plat Form ல் ஒன்று சேர்ப்பதற்கு இதுவே ஒரே வழியாகும். மாநாட்டில் கலந்து கொண்டதில் மிகவும் அன்பு கிடைத்தது.

செரலியோனின் Deputy Minister Of Sports வந்திருந்தார். நான் மாநாட்டில் கலந்து கொண்டது எனது வாழ்வின் வித்தியாசமான அனுபவமாகும். சிறுவர் பெரியவர் எல்லாரும் முன்னே வந்து முன்னே வந்து விருந்தினருக்கு நல்வரவு கூறினர். ஒருவர் மற்றவரை மிஞ்சி தொண்டு செய்தனர். நான் இன்று வரை இதுபோன்று ஒரு மார்க்க ரீதியான மாநாட்டில் அல்லது இந்த மாநாட்டில் அளவுக்கு விருந்தினர்களை உபசரிக்கக் கண்டதில்லை.

லெனின் உடைய National Assembly ன் Deputy Speaker ஹாரிக் வந்திருந்தார். கூறுகிறார். எனது பார்வையில்பட்ட குறிப்பிடத்தக்க விஷயமாவது அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் தமது கலீஃபாவிடம் அளவு கடந்த அன்வு செலுத்துகின்றனர். இதுவேறு எங்கும் காணக் கிடைக்காது.

அர்ஜென்டைனிலிருந்து ஓர் அஹ்மதி வந்திருந்தார். கூறுகிறார். நான் உண்மையான மார்க்கத்தை 10 வருடமாக தேடுகிறேன். இறுதியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்ததன் மூலம் எனக்கு உண்மையான மார்க்கம் கிடைத்தது. ஆண்டு

மாநாட்டின் ஏற்பாடுகளினால் நான் மிகவும் தாக்கத்திற்குள்ளானேன். என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம் மாநாட்டின் இளைய தலைமுறையினரின் வருகை. இன்று வரை மார்க்க விழாக்களில் இளைய தலைமுறையினரை கண்டதில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டுமே கண்டேன்.

ஜப்பானில் இருந்து ஒரு விருந்தாளி ஜேஷியோ ஏவாரோ சாஹிப் வந்திருந்தார். கூறுகிறார். விருந்து உபசரிப்பு முறை, தொண்டர்களின் பரிவு பரிவர்த்தனை ஆகியவை நம் அனைவருக்கும் மறக்க முடியாது நினைவாகும். பிரிட்டனின் ஆண்டு மாநாடு ஐக்கிய நாடுகள் சபையின் முன்மாதிரியை எடுத்து வைத்தது. பல்வேறு நாட்டினர், நிறத்தினர், இனத்தினர் ஒரே குடும்பம் போல் தென்பட்டனர். இந்த ஆன்மீக சூழல் சிறப்பான தாக்கத்தை என் உள்ளத்தில் ஏற்படுத்தியது.

ஜப்பானிய டாக்டர் ஜவானி முன்சே வந்திருந்தார். இவர் Medical Science ல் Ph.D வாங்கியவர். டோக்கியோ International Book Fare ன் போது இவருக்கு ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்துள்ளது. புத்தக கண்காட்சியின் முதல் நாளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூல் இவருக்கு வழங்கப்பட்டது. கூறினார். நான் இரவில் இஸ்லாமிய போதனையின் தத்துவ ஞானம் என்ற நூலை வாசிக்கத் தொடங்கினேன். இந்த புத்தகத்தை படித்து முடிக்காமல் தூங்குவது எனக்கு சிரமமாகிவிட்டது. காலையில் இதனை படித்து முடித்ததும் இஸ்லாம் ஒரு உண்மையான மார்க்கம் என்றும் உண்மைக்கான வழியாகும் என்றும் உறுதி ஏற்பட்டு விட்டது. இவர் இந்த மாநாட்டைப் பார்த்து விட்டு கூறுகிறார். நான் உண்மையை தேடினேன். உண்மை கிடைத்தது. இஸ்லாம் அஹ்மதிய்யத்தை தவிர வேறு சிறந்த வாழ்க்கை முறை இல்லை. மாநாட்டின் முதல் நாள் இவர் பைஅத் செய்யவில்லை. மறுநாள் நான் பைஅத் செய்ய வேண்டும் என்றார். பள்ளியிலேயே பைஅத் நடந்தது.

ஸ்பெயினின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர். ஒருவர் ஜோஷ்மாரியா சாஹிப். கூறுகிறார். மாநாட்டின் ஏற்பாடுகளை கண்டு நான் யோசித்துக் கொண்டிருந்தேன். இந்த அளவுக்கு ஏற்பாடுகளை செய்ய நேரிட்டால் நாம் எவ்வாறு செய்ய முடியும் ? பிறகு கூறுகிறார். நான் மூன்று நாட்களும் மாநாட்டின் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று வந்தேன். பலமுறை அவர் இதனை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார். இவ்வளவு ஒழுங்கமைக்கப்பட்ட பணிகளை நமது அரசுகள் செய்ய முடியாது. இதனை தன்னார்வத்துடன் செய்கின்றனர். நான் இந்த மாநாட்டில் இருந்து நிறைய கற்றுக் கொண்டு போகிறேன். ஆக, தன்னார்வர்கள், தொண்டர்கள் ஆகிய இவர்களின் பணியும் ஒரு மவுனமான பிரச்சாரமாகும்.

ஒரு நாடாளுமன்ற பெண் உறுப்பினர் ஒருவர் கூறுகிறார். அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்ட களைப்படையாமல் சேவை செய்கின்றது. நான் கலீஃபாவுக்கு கூற விரும்புகிறேன். எங்களுக்கு ஓர் ஆசை உள்ளது. நீங்கள் எங்கள் நாட்டுக்கு வாருங்கள். அதனை உங்கள் வீடாகக் கருதுங்கள்.

யுனானிலிருந்து ஒரு குழு முதன் முறையாக வந்தது. டாக்டர் அக்ரம் ஷரீஃப் பெனால் தோக்லோ சாஹிப் கூறுகிறார். இத்தகைய ஒரு ஒருங்கமைக்கப்பட்ட ஜமாஅத்தை நான் ஒருபோதும் பார்க்கவில்லை. தெரிந்தவராக இருந்தாலும் தெரியாதவராக இருந்தாலும் மிகவும் அன்புடன் சந்திக்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் இருந்து பத்திரிகையுடன் தொடர்புள்ள ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர் கூறுகிறார். மாநாட்டின் இறுதி நாளில் கலந்து கொண்டேன். நான் உலகின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். ஆனால் இது போன்ற நிகழ்ச்சியை நான் ஒருபோதும் பார்க்கவில்லை. ஓர் வியத்தகு காட்சி தான்.

ஓர் அஹ்மதியல்லாத முஸ்லிமல்லாத மானிடர் ஷேரின்பேர்க் கலந்து கொண்டார். இவரும் சுவிட்சர்லாந்து காரர்தான். எல்லாவற்றையும் விட அதிகமாக உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் காட்சி இருந்தது. எவ்வாறு மக்கள் தமது கலீஃபாவுடன் விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றனர்.

ஒரு புதிய அஹ்மதி நண்பர் வந்திருந்தார். அங்கு 11 வருடம் மேயராகவும் இருந்துள்ளார். கூறுகிறார். எல்லா காட்சிகளையும் கண்ட பிறகு நான் உறுதியான எண்ணத்துடன் சொல்கிறேன். கோஸ்ராய் நகரகம் மற்றும் எனது குடும்பத்தில் இருக்கும் இஸ்லாம் பற்றிய தவறான கருத்தை அகற்ற முயற்சி செய்வேன். ஆகவே, இந்த மாநாடு தப்லீகிற்கு பெரும் வழியாக இருக்கின்றது.

ஜமைக்காவில் இருந்து ஒரு பத்திரிகையாளர் (பெண்) வந்திருந்தார். இந்த பெண் பத்திரிகையாளர் என்னை பேட்டி எடுத்தார். கூறுகிறார் அங்கு சென்று எழுதுவேன். டாக்குமென்டரி தயாரிப்பேன் என்று கூறினார். இதனால் தப்லீக்கிற்கு மேலும் வழி திறக்கிறது. கூறுகிறார். ஜமைக்காவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை பரப்புவதற்கு கடுமையாக உழைப்பேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன். இவர் ஒரு கிறித்தவப் பெண். நமது ஜமாஅத்திற்கு பிரச்சாரம் செய்ய ஒரு வழியாக அமைகிறார்.

பனாமாவில் இருந்து ருனால்டோ குக்கர் சாஹிப் கூறுகிறா். இத்தகைய முழு அமைதியின் காட்சியை இக்காலத்தில் காண்படு அரிது. இங்கு அன்பு நேசத்தின் எத்தகைய காட்சியை பார்த்தேன் எனில் என்னால் அதனை கற்பனையும் செய்ய முடியாதிருந்தது. கூறுகிறார். இனிமேல் எவராவது இஸ்லாம் பற்றி தவறாக பேசினால் அனைத்து முஸ்லிம்களும் ஒரு போல் இருக்க மாட்டார்கள். நான் முழுமையாக தற்காப்பு செய்வேன்.

கஸகிஸ்தானின் தானாசிவா உமா சாஹிபா. இவர் State யுனிவர்ஸிட்டியின் பேராசிரியரும் New York Academy யின்

உறுப்பினரும் ஆவார். கூறுகிறார். 2000 ஆம் ஆண்டில் இவர் Lady of the world ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது கருத்தைக் கூறினார். நான் எனது 75 ஆண்டுகளில் வாழ்வில் உலகின் பல இடங்களை பார்த்து விட்டேன். ஆனால் மனித குலத்தின் மீது அன்பு, மனித குலத்தில் சரியான பொருளில் உதவி செய்தல் ஆகியவற்றை நான் இங்கு தான் பார்த்தேன்.

ஒரு மாணவி கொயிட்டி மாலாவில் இருந்து வந்திருந்தார். மாநாட்டில் கலந்து கொண்டது என்னைப் பொருத்தவரை புத்தம் புதிய அனுபவமாக இருந்தது. இந்த மாநாட்டிடின ஆன்மீக சூழல் வருங்கால வாழ்வையும் சீர்படுத்தும் என்ற நம்பிக்கை ஏற்படுத்துகிறது.

குரேஷியாவில் இருந்து 28 பேர் கொண்ட குழு வந்திருந்தது. குரேசியாவின் நாடாளுமன்ற உறுப்பினரான காவல் பாண்டெக் சாஹிபும் கலந்து கொண்டிருந்தார். கூறுகிறார். நான் எந்த முஸ்லிம் அமைப்பின் கூட்டத்திலும் கலந்து கொண்டதில்லை. இது முதல் முறையாகும். பிறகு இவர் கடைசி சொற்பொழிவையும் கேட்டார். கூறுகிறார். இதன்படி உலகம் நடந்து கொண்டால் உலகம் அமைதியின் பூங்காவாக ஆகிவிடும். இவர் கணிசமான தாக்கம் பெற்றிருந்தார்.

செராலியோனின் National Tv SLBC யின் பத்திரிகையாளர் கலந்து கொண்டார். கூறுகிறார். மாநாட்டின் போதே ஜமாஅத்தில் இணைந்து விட வேண்டும் என்று விரும்பினேன். பிறகு இவர் உலகளாவிய பைஅத்தின் போது பைஅத்தும் செய்து விட்டார்.

பால்சேங்கர் டேவிஷ் பிரிட்டிஷ் Royal Air Force குரூப் கேப்டன் ஆவார். கூறுகிறார். நான் கண்டிப்பாக கூறியே ஆகவேண்டும். நான் இதுபோன்ற நூற்றுக்கணக்கான Programe பார்த்துள்ளேன். ஆனால் இத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சியை ஒருபோதும் பார்க்கவில்லை.

ஐவரிகோஸ்டில் இருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர். கூறுகின்றனர். கூவாங்கூ கோத்ரா சாஹிப் அவர் கூறுகிறார். இது எமது முக்கியமான தருணங்களுள் ஒன்றாகும். பல வருடமாக அஹ்மதியாக இருக்கிறேன். ஆனால் முதல் முறையாக இந்த ஆன்மீக சூழலை காண்கிறேன். நான் முதலிலேயே அஹ்மதி தான். எனினும் இந்த மாநாட்டைப் பார்த்ததில் எனது ஈமான் இன்னும் உறுதியாகிவிட்டது.

பிரிட்டிஷ் Socitety of Turin Shront நியூங்லெட்டின் Editor ஆவார். இவரும் டியூரின் ஷெராவுட்டின் நிபுணர்களுள் ஒருவர். இக்காலத்தில் நான் எத்தனை முறை மஸீஹின் கபன் துணி பற்றி பேசியுள்ளேன். அவை அனைத்திலும் சிறந்த Forum இதுவாகவே இருந்தது.

Press மற்றும் ஊடகங்கள் பற்றி நான் கூறினேன். அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் Press மீடியா மூலமாக பரந்த அளவில் ஜமாஅத் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது. அதற்காக இறைவன் முன் குனிய வேண்டும். எவ்வாறு அல்லாஹ் தஆலா தூதுச் செய்தியை கொண்டு சேர்த்தான் ? ஜலஸாவின் செய்தி, வீடியோ கிளப்பிங். டெலிவிஷன் மற்றும் Online வீடியோவின் மூலம் ஏழு பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் மொத்தம் 3.3 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது. ரேடியோவின் நிகழ்ச்சிகள் மூலம் 2.79 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது. Print & Online Media மூலம் 14 பல்வேறு Forum மூலம் 2.7 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது. சோகியல் மீடியாக்கள் மூலம் 1195 பேர் பங்கு பெற்றுள்ளனர். ஜலஸா நிகழ்ச்சிகள் 5 மில்லியன் மக்கள் வரை சென்று சேர்ந்தது. அதுபோன்று மேற்கண்ட போரம் மூலம் 12.63 மில்லியன் மக்கள் வரை மாநாட்டு நிகழ்ச்சிகளும், செய்திகளும் சென்று சேர்ந்துள்ளது. ஆப்ரிக்கா தவிர மீடியா கவரேஜ் கிடைத்த நாடுகள் பிரிட்டானியா, ஸகாட்லேண்ட் வேல்ஸ், அயர்லாந்து, USA, கனடா, பாகிஸ்தான், இந்தியா, பிரான்ஸ், ஜமைக்கா, பொலிவியா, யுனான், பெலிஷா ஆகியவை அடங்கும். மிக முக்கியமான சேனலாக BBC News 24 இல் மாநாட்டு செய்தி மூன்று முறை ஒளிபரப்பட்டது. இதுவும் முதன் முறை நடந்துள்ளது. ஆரம்ப நிகழ்வு என்ற முறையில் இதனை ஒளிபரப்ப அனுமதி கிடைத்தது. பிறகு பலமுறை ஒளிபரப்ப வாய்ப்பு கிடைத்தது. International News Agency France ஜலஸா செய்தியை ஒளிபரப்பியது. AFB வீடியோ Report தொடர்ந்தது. பிறகு USA, Uk, இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறு செய்திகள் Website ல் ஒளிபரப்பப்பட்டது. Yahoo News, NBC News. MSN போன்றவை இதில் அடங்கும். பிறகு ரேடியோ கவரேங்கள் 34 ரேடியோ, INviews BBC யின் National ரேடியோ – 3, 24 ரேடியோ ஸ்டேஷன். இரண்டு உள்ளூர் ரேடியோக்கள் மூலம் ஒலிபரப்பட்டது. அவற்றில் 4 BBC ரேடியோ அடங்கும். இது பரிட்டனில் அதிகமாக கேட்கப்படும் ரேடியோவாகும். இதில் 20 நிமிடம் நீண்ட பேட்டி ஒலிபரப்பட்டது. அதுதவிர, BBC ஸ்காட்லாந்ட், BBC ரேடியோ ஸ்டேஷன் Network ல் ஒரு மணிநேரத்திற்கும் அதிகமான ஒரு நேர்காணல் ஒலிபரப்பாகியது. 33 ரேடியோ ஸ்டேஷன் மூலம் மொத்தம் 3.79 மில்லியன் பேர்வரை செய்தி சேர்ந்தது.

அவற்றுள் குறைந்த பட்சம் இரண்டு பேட்டிகளில் ஒரு பத்திரிகையாளர் என்னை பேட்டி எடுத்தார். ஒளிபரப்பினார். இதனால் முஸ்லிம் பிரிவுகளிடம் இருந்து கூச்சல் எழுந்தது. நாம் எல்லாரும் ஒன்று சேர வேண்டும். முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லை. நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் வகிப்போம் என்று கூச்சலிட்டனர். 2 ஏவிஷன் கத்தலிக் ஜலஸாவிற்கு முன் செய்தியும், ஒரு கட்டுரையும் அச்சிட்டது. விம்டன் Post. இதுவும் இரு கட்டுரைகளை அச்சிட்டது. இதுபோன்று இன்னும் அதிகமானவை. Social Media டுவிட்டர் மூலமாக தூதுச் செய்தியை சேர்த்து வந்தன. இது தலைமையக Report. இதுதவிர U.K வின் Press & Media மூலம் என் கருத்தின்படி 2–3 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்திருக்கும்.

ஆப்ரிக்கன் நாடுகளின் தேசிய T.V கள் மாநாட்டு செய்திகளை Live செய்தன. அவற்றுள் கானா, நைஜீரியா, செராலியோன், உகாண்டா, காங்கோ, பஞ்சாகஷா அடங்கும். ஹதிகத்துல் மஹ்தியில் இருந்து நேரடியாக ஒளிரப்பின.

கானாவில் ஒரு நண்பர் நானா கொத்தா சாஹிப் Phone மூலம் கூறினார். நான் மார்க்க அடிப்படையில் கிறித்தவன். ஆனால் உங்கள் நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பை பார்த்து என்மீது உணர்ச்சி பொங்கியது. கண்ணீரை கட்டுப்படுத்துவது எனக்கு கஷ்டமாகி விட்டது. இக்காலத்தில் இஸ்லாத்தின் பிரதிநிதித்துவம் வகிப்பதில் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் முதலிடம் வகிக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நான் ஜமாஅத்தின் ஒரு முபல்லிக் ஆகி ஜமாஅத்தைப் பரப்ப வேண்டும் என்பது எனது துஆவாகும். டமாலே கானாவில் இருந்து ஒரு பெண்மணி உமா இத்தூஸ் சாஹிப் கூறுகிறார். நான் கானா T.V மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டைப் பார்த்தேன். இந்த மாநாட்டைப் பார்த்து பெரும் தாக்கத்திற்கு உள்ளானேன். நான் முஸ்லிம் தான். ஆனால் ஆண்டு மாநாட்டுக் காட்சிகளைப் பார்த்த பிறகு நான் அஹ்மதி முஸ்லிம் ஆக விரும்புகின்றேன்.

செராலியோனில் அல்லாஹ்வின் அருளால் அதன் National T.V SIBCS மாநாட்டின் காட்சிகளை 36 மணி நேரமும் Live ஆக காட்டியது. கொலியோவின் நிறைய பேர் Free டெலிஃபோன் லைன் மூலமாக தமது நல்ல விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

புர்கினா பாஸோவில் நான்கு Radio Station ல் மூன்று நாள் நிகழ்ச்சிகளை Live ஒலிபரப்பட்டது. இன்னும் நிறைய கேட்டவர்கள் உள்ளனர். செராலியோனில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பட்டனர். இதனை பல மில்லியன் பேர் வரை பல்வேறு கண்டங்களில் ஜலஸாவின் செய்தி சேர்த்தது. அல்லாஹ்வின் அருளால் Press & Media நல்ல முறையில் பணி செய்துள்ளது. M.T.A வும் நல்ல வேலை செய்துள்ளது. நமது ஆப்ரிக்காவின் MTA Incharge ஆக ஆக்கப்பட்டுள்ளவர் பெரும் பணி செய்துள்ளார். அவருக்கு அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் அறிமுகம் ஆண்டு மாநாடு மூலம் மிகவும் பரந்து விரிந்தது. அதில் நிறைய பணி செய்வோர் அடங்கியிருந்தனர். MTA விலும் சரி; Press Section லும் சரி. Press Section ல் U.K வின் இளைஞர் பணி செய்கிறார். அவரது திறமையை அல்லாஹ் அதிகமாக்குவானாக. அவர் தனது பணிணை செவ்வனே செய்யட்டும்.

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய மிர்ஸா ரபீஃப் அஹ்மது சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய சையத் பரிதா பேகம் சாஹிபா அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் அவர்களது சிறப்பம்சங்களையும் எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மருமகள் ஆவார்கள். அல்லாஹ் தஆலா மர்ஹூமாவுக்கு மன்னிப்பை வழங்குவானாக. அவர்களது சந்ததிகளுக்கு பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 28.08.2015
Tamil Translation : Moulavi. M. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516